*பிரசார் பாரதி*
*அகில இந்திய வானொலி, சென்னை-4*
*29 06 2026 MONDAY 7 15PM ஆகாஷவாணி – செய்திகள்*

*தலைப்புச் செய்திகள்*

- *Seychelles நாட்டில் தாம் மேற்கொண்ட அரசுமுறைப் பயணம் ஆக்கபூர்வமாக அமைந்ததாக பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார்.*
- *பாதுகாப்பு துறையில் மிகப் பெரிய சீர்திருத்த நடவடிக்கையாக பாதுகாப்பு ஆராய்ச்சி மேம்பாட்டு நிறுவனத்திற்கு நிதி அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது.*
- *மக்களுக்கான நலத்திட்டங்களை செயல்படுத்துவதில் மாநில அரசுகள் தொழில்நுட்பங்களை கூடுதலாக பயன்படுத்த வேண்டும் என்று மத்திய அரசு வலியுறுத்தியுள்ளது.*
- *ஆப்கானிஸ்தான் மீது, பாகிஸ்தான் நடத்திய வான்வழி தாக்குதலில் 36 பேர் உயிரிழந்துள்ளனர்.*
- *ஆசிய இளையோர் டேபிள் டென்னிஸ் சாம்பியன் போட்டியில், இந்தியா அரையிறுதிக்கு முன்னேறியுள்ளது.*

*>>>>><<<<<*

*Seychelles நாட்டில் தாம் மேற்கொண்ட அரசுமுறைப் பயணம் ஆக்கபூர்வமாக அமைந்ததாக பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார்.*

*சமூகவலைதளத்தில் இதனை தெரிவித்துள்ள அவர், அந்நாட்டுடனான நல்லுறவை மேலும் வலுப்படுத்தவும் தமது பயணம் உதவியுள்ளதாக குறிப்பிட்டுள்ளார்.*

*Seychelles தேசிய தின கொண்டாட்டத்தில் பங்கேற்றது மகிழ்ச்சி அளிப்பதாக உள்ளது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.*

*தமக்கு அளித்த வரவேற்பிற்காக அந்நாட்டு அரசுக்கும், மக்களுக்கும் நன்றி தெரிவித்துக் கொள்வதாகவும் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார்.*

*>>>>><<<<<*

பாதுகாப்பு துறையில் மிகப் பெரிய சீர்திருத்த நடவடிக்கையாக பாதுகாப்பு ஆராய்ச்சி மேம்பாட்டு நிறுவனத்திற்கு நிதி அதிகாரம் வழங்கப்பட்டுள்ளதாக அத்துறைக்கான அமைச்சர் திரு. ராஜ்நாத் சிங் கூறியுள்ளார்.

இன்று புதுதில்லியில் இதற்கான ஒப்புதல் வழங்கும் நிகழ்ச்சியில் கலந்து கொண்டு அவர் பேசினார்.

பாதுகாப்பு துறையில், ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டுப் பணிகளை குறித்த காலத்திற்குள் நிறைவேற்றுவதற்கு இந்த நடவடிக்கை உத்வேகம் அளிக்கும் என்று அவர் குறிப்பிட்டார்.

தொழில்துறையினரோடு இந்த நிறுவனம் இணைந்து செயல்படுவதற்கும் இது உதவிடும் என்று திரு. ராஜ்நாத் சிங் கூறினார்.

>>>>><<<<<

மக்களுக்கான நலத்திட்டங்களை செயல்படுத்துவதில் மாநில அரசுகள் தொழில்நுட்பங்களை கூடுதலாக பயன்படுத்த வேண்டும் என்று மத்திய அமைச்சர் திரு. சிவராஜ் சிங் சௌஹான் வலியுறுத்தியுள்ளார்.

புதுதில்லியில் நடைபெற்று வரும் ஊரக வளர்ச்சி மாநாட்டின் இரண்டாம் நாளான இன்று அவர் உரையாற்றினார்.

கிராமங்களின் வளர்ச்சிக்கு மாநில அரசுகள் கூடுதல் முக்கியத்துவம் அளிக்க வேண்டும் என்றும் அவர் கேட்டுக் கொண்டார்.

வளர்ச்சியடைந்த இந்தியாவிற்கான ஊரக வேலைவாய்ப்பு மற்றும் வாழ்வாதார இயக்கம் நாளை மறுநாள் முதல் செயல்பாட்டுக்கு வருவதாக அவர் தெரிவித்தார்.

இதற்காக, 95 ஆயிரத்து 682 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருப்பதாகவும் திரு. சிவராஜ் சிங் சௌஹான் கூறினார்.

>>>>><<<<<

யமுனை நதிநீர் பங்கீடு ஒப்பந்தத்தில் ஹரியானாவும், ராஜஸ்தானும் கையெழுத்திட்டுள்ளன.

இன்று புதுதில்லியில் மத்திய அமைச்சர் திரு. அமித் ஷா முன்னிலையில் இந்த ஒப்பந்தம் கையெழுத்திடப்பட்டதாக மத்திய அரசின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

ஹரியானா முதலமைச்சர் திரு. நயாப்சிங் சைனி, ராஜஸ்தான் முதலமைச்சர் திரு. பஜன்லால் சர்மா ஆகியோர் இந்த நிகழ்ச்சியில் பங்கேற்றதாகவும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

>>>>><<<<<

சர்வதேச அரங்கில் இந்தியாவின் நன்மதிப்பு அதிகரித்து வருவதாக பிரதமர் அலுவலக இணையமைச்சர் டாக்டர் ஜிதேந்திர சிங் கூறியுள்ளார்.

இன்று புதுதில்லியில் பிரிக்ஸ் அமைப்பின் தொழில் வர்த்தக கூட்டமைப்பினருடன் கலந்துரையாடுகையில் அவர் இவ்வாறு கூறினார்.

புதுமை கண்டுபிடிப்புகள் மற்றும் புத்தொழில் துறைகளில் இந்தியா முன்னணியில் இருப்பதாக அவர் தெரிவித்தார்.

இதன்மூலம் தொழில்துறையினருக்கு ஏராளமான வாய்ப்புகள் உருவாகியுள்ளதாகவும் அவர் கூறினார்.

இதனை அவர்கள் முழுமையாக பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்றும் டாக்டர் ஜிதேந்திர சிங் கேட்டுக் கொண்டார்.

>>>>><<<<<

Greece-உடனான பொருளாதார ஒத்துழைப்பை மேலும் வலுப்படுத்துவது குறித்து அந்நாட்டு அமைச்சர் திரு. Takis Theodorikakos-வுடன் விரிவாக பேச்சு நடத்தியுள்ளதாக மத்திய தொழில் மற்றும் வர்த்தகத்துறை அமைச்சர் திரு. பியூஷ் கோயல் கூறியுள்ளார்.

சமூகவலைதளத்தில் இதனை தெரிவித்துள்ள அவர், உற்பத்தி மற்றும் புத்தொழில் துறைகளில் புதிய வாய்ப்புகள் குறித்து இந்த பேச்சுக்களின் போது விவாதிக்கப்பட்டதாக குறிப்பிட்டுள்ளார்.

>>>>><<<<<

தேசிய புள்ளியியல் தினம் இன்று கொண்டாடப்பட்டது.

இதனையொட்டி, நாடுமுழுவதும் விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடைபெற்றன.

புதுதில்லியில் நடைபெற்ற நிகழ்ச்சியில் மத்திய புள்ளியியல் துறை இணையமைச்சர் திரு. இந்திரஜித் சிங், நான்கு புத்தகங்களை வெளியிட்டு பேசினார்.

வளர்ச்சியடைந்த இந்தியாவை உருவாக்குவதில் புள்ளியியல் தரவுகள் முக்கியப் பங்கு வகிப்பதாக அவர் கூறினார்.

இந்நிகழ்ச்சியில் பிரதமரின் முதன்மைச் செயலர் திரு. பி.கே. மிஸ்ரா பேசுகையில், நாட்டின் புள்ளியியல் கட்டமைப்புக்கு சர்வதேச அளவில் வரவேற்பு கிடைத்து வருவதாக தெரிவித்தார்.

>>>>><<<<<

வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தப் பணிகளை கர்நாடகாவில் ஆளும் காங்கிரஸ் எதிர்க்கவில்லை என்று அம்மாநில உள்துறை அமைச்சர் திரு. பிரியங் கார்கே கூறியுள்ளார்.

பெங்களூருவில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், இப்பணிகள் தொடர்பாக காங்கிரஸ் தெரிவித்த எதிர்ப்புகளுக்கு தேர்தல் ஆணையம் உரிய பதிலை அளிக்க வேண்டும் என்று கூறினார்.

இப்பணிகள் தொடர்பாக, கர்நாடக அரசு சார்பில் 8 கோரிக்கைகள் தேர்தல் ஆணையத்திடம் சமர்ப்பிக்கப்பட்டிருப்பதாகவும் திரு. பிரியங் கார்கே தெரிவித்தார்.

>>>>><<<<<

பாகிஸ்தானுடன் இந்தியா பேச்சுகள் நடத்தியதாக வெளியான செய்திகளை மத்திய அரசு திட்டவட்டமாக மறுத்துள்ளது.

செசல்ஸில் செய்தியாளர்களிடம் பேசுகையில் வெளியுறவுத்துறை செயலர் திரு. விக்ரம் மிஸ்ரி இதனை தெரிவித்தார்.

இலங்கையில் நடைபெற்ற பாதுகாப்பு தொடர்பான மாநாட்டின் போது இந்த பேச்சுகள் நடத்தப்பட்டதாக வெளியான செய்திகளை சுட்டிக்காட்டி எழுப்பப்பட்ட கேள்விகளுக்கு, இந்த பேச்சுகளில் இந்தியாவின் சார்பில் அதிகாரப்பூர்வமாக யாரும் பங்கேற்கவில்லை என்று அவர் பதில் அளித்தார்.

>>>>><<<<<

ஆந்திராவில், அரசின் திட்டங்கள் மக்களுக்கு எளிதாக சென்றடைவதை அதிகாரிகள் உறுதி செய்ய வேண்டும் என்று அம்மாநில முதலமைச்சர் திரு. சந்திரபாபு நாயுடு அறிவுறுத்தியுள்ளார்.

இன்று அமராவதியில் பல்வேறு துறைகளின் செயல்பாடுகள் குறித்து ஆய்வு மேற்கொண்டு அவர் பேசினார்.

அரசின் சேவைகளை பெறுவதற்கான நெறிமுறைகள் எளிதாக்கப்பட வேண்டும் என்றும் முதலமைச்சர் இக்கூட்டத்தில் வலியுறுத்தினார்.

>>>>><<<<<

மின்வாகன கொள்கையை தில்லி அரசு வெளியிட்டுள்ளது.

இதன்படி, 30 லட்சம் வரை உள்ள மின்வாகனங்களுக்கு சாலை வரி மற்றும் பதிவு கட்டணங்களிலிருந்து விலக்கு அளிக்கப்பட்டுள்ளது.

வாகன பயன்பாட்டில் ஏற்படும் காற்று மாசை குறைக்கும் வகையில் தில்லி அரசு இந்த கொள்கையை வெளியிட்டுள்ளது.

>>>>><<<<<

இணையதள மோசடி தொடர்பாக தில்லி காவல்துறையினர் 10 பேரை கைது செய்துள்ளனர்.

ஜார்க்கண்ட் மற்றும் தில்லி புறநகர் பகுதிகளிலிருந்து செயல்பட்டு வந்த இவர்கள், பல்வேறு இணையதள மோசடிகளில் ஈடுபட்டுள்ளதாக காவல்துறையினர் தெரிவித்தனர்.

இவர்களிடம் தொடர்ந்து விசாரணை நடைபெற்று வருவதாகவும் அவர்கள் கூறினர்.

>>>>><<<<<

ஆப்கானிஸ்தான் மீது, பாகிஸ்தான் நடத்திய வான்வழி தாக்குதலில் 36 பேர் உயிரிழந்துள்ளனர்.

Paktia, Paktika, Kunar ஆகிய மாகாணங்களை குறிவைத்து இந்த தாக்குதல் நடத்தப்பட்டதாக ஆப்கானிஸ்தான் அரசின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

இந்த தாக்குதல் கடும் கண்டனத்திற்குரியது என்றும், இதில் 163க்கும் மேற்பட்டோர் காயமடைந்திருப்பதாகவும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

பொதுமக்கள் வசிக்கும் பகுதிகளில் இந்த தாக்குதல் நடத்தப்பட்டது, சர்வதேச விதிமுறைகளுக்கு எதிரானது என்றும் ஆப்கானிஸ்தான் அரசின் செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

>>>>><<<<<

ஆசிய இளையோர் டேபிள் டென்னிஸ் சாம்பியன் போட்டியில், இந்தியா அரையிறுதிக்கு முன்னேறியுள்ளது.

பாங்காக்கில் நடைபெற்று வரும் இப்போட்டியின் 19 வயதுக்குட்பட்டோருக்கான ஆடவர் பிரிவு காலிறுதி ஆட்டத்தில் இந்தியா 3-1 என்ற ஆட்டக்கணக்கில் ஹாங்காங்கை வென்றது.

இதன்மூலம் உலக இளையோர் டேபிள் டென்னிஸ் போட்டியில் பங்கேற்பதற்கும் இந்தியா தகுதி பெற்றுள்ளது.

>>>>><<<<<

உலக இளையோர் செஸ் சாம்பியன் போட்டியில், இந்தியா ஒரு தங்கம், ஒரு வெள்ளிப்பதக்கம் வென்றது.

*Georgia-வின் Batumi-ல் நடைபெற்ற இப்போட்டியின் மகளிர் 12 வயதுக்குட்பட்டோருக்கான பிரிவில் Divi Bijesh தங்கப்பதக்கத்தையும், 18 வயதுக்குட்பட்டோருக்கான பிரிவில் Pratitee Bordoloy வெள்ளிப்பதக்கத்தையும் வென்றனர்.*

>>>>><<<<<

*அமெரிக்காவில் நடைபெற்ற சர்வதேச சைக்கிள் சாம்பியன் போட்டியில், இந்தியாவின் Harshveer Singh Sckhon வெள்ளிப்பதக்கம் வென்றார்.*

>>>>><<<<<

*அமெரிக்க ஓப்பன் பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் ஸ்ரீகாந்த் வெள்ளிப்பதக்கம் வென்றார்.*

>>>>><<<<<

*இத்தாலி ஓப்பன் பேட்மிண்டன் போட்டியில், இந்தியாவின் Anwesha Gowda வெள்ளிப்பதக்கம் வென்றார்.*

>>>>><<<<<

*இங்கிலாந்து-ஏ அணிக்கு எதிரான முதலாவது மகளிர் ஒருநாள் கிரிக்கெட் போட்டியில், இந்தியா-ஏ அணி 7 விக்கெட் வித்தியாசத்தில் வெற்றிபெற்றது.*

*Hove-ல் நடைபெற்ற இப்போட்டியில் முதலில் பேட் செய்த இங்கிலாந்து-ஏ அணி நிர்ணயிக்கப்பட்ட 50 ஓவரில் 6 விக்கெட் இழப்புக்கு 222 ரன் எடுத்தது.*

*அதிகபட்சமாக Grace Scrivens 88 ரன் எடுத்தார்.*

*Minnu Mani 2 விக்கெட்டுகளை வீழ்த்தினார்.*

*223 ரன் எடுத்தால் வெற்றி என்ற இலக்கோடு பின்னர் பேட் செய்த இந்தியா 46 ஓவரில் 3 விக்கெட் இழப்புக்கு 226 ரன் எடுத்து வெற்றிபெற்றது.*

*Tejal Hasabnis 57 ரன் எடுத்து ஆட்டமிழக்காமல் இருந்தார்.*

*மூன்று போட்டிகளைக் கொண்ட இந்த தொடரில் இந்தியா 1-0 என்ற ஆட்டக்கணக்கில் முன்னிலை பெற்றுள்ளது.*

>>>>><<<<<

*மகளிர் ஒருநாள் கிரிக்கெட் போட்டிகளில் அதிக விக்கெட்டுகளை வீழ்த்தியவர் என்ற சாதனையை இந்தியாவின் Deepti Sharma படைத்துள்ளார்.*

>>>>><<<<<

அமெரிக்க Smash டேபிள் டென்னிஸ் போட்டியில், இந்தியாவின் Manav Thakkar இரண்டாவது சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

>>>>><<<<<

உலக கோப்பை கூடைப்பந்து தகுதிச் சுற்று போட்டியில், இந்தியா இன்று லெபனானை எதிர்கொள்கிறது.

லெபனானில் நடைபெறவுள்ள இப்போட்டி, இரவு மணி 11.30-க்கு தொடங்குகிறது.

>>>>><<<<<

வாலிபால் போட்டிகளுக்கான சர்வதேச தரவரிசை பட்டியலில் இந்தியா 42வது இடத்திற்கு முன்னேறியுள்ளது.

>>>>><<<<<

2028ஆம் ஆண்டு லாஸ்ஏஞ்சல்ஸில் நடைபெறவுள்ள ஒலிம்பிக் போட்டிகளின் டிவென்டி டிவென்டி கிரிக்கெட் போட்டிகளில் பங்கேற்க இந்திய மகளிர் அணி நேரடியாக தகுதி பெற்றுள்ளது.

>>>>>END<<<<<